ஷாலினியின் கதை : எதிர்ப்பின் சக்தி

தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான அமைதியற்ற நிலையினை சிறுபிள்ளையாக இருக்கும்போது முதற் தடவையாக கேள்விப்பட்டதை தனது நினைவில் மீட்டிப்பார்த்த வண்ணம் "பெரும்தொகையான மலையகத் தமிழர்கள் தமது இருப்பிடங்களிலிருந்து விரட்டப்பட்டு இடம்பெயர்க்கப்பட்டனர்." என ஷாலினி கூறுகிறார். வவுனியாவில் ஒரு நல்ல விவசாயக் குடும்பத்தில் 1967 ஆம் ஆண்டு பிறந்த இவர், பதினொரு பிள்ளைகளில் ஐந்தாவது பிள்ளையாவார். நெல் வயல்களையும் விவசாய நிலங்களையும் அவரது குடும்பம் தமக்கு சொந்தமாகக் கொண்டிருந்ததுடன் ஷாலினி குறிப்பிட்டவிதமாக அவர்கள் "அரசாங்கத்தில் உதவியினை ஒருபோதும் எதிர்பார்த்ததில்லை." போரின் இறுதியிலே, அவரும் அவரது குடும்பமும் அவர்களது இருப்பிடங்களையும் இழந்ததுடன் முள்ளிவாய்க்கால் ஊடாக விரட்டப்பட்டனர் பல வருடங்கள் கடந்தும் திரளான வன்முறையானது ஆரம்பத்திலிருந்தே மறுக்கமுடியாத விதமாக அவரை வந்தடைந்தமையானது சிவசேகர கலவரத்தையும் மலையக தமிழர்களின் இடப்பெயர்வையும் அவருக்கு நினைவுபடுத்தியது.

அவரது பெற்றோர் அவரது கல்விக்கு முன்னுரிமை வழங்கியிருந்தும் யுத்தத்தின் பின்னர் கல்வியைத் தொடரும்பொருட்டு பெருமதிப்பு மிக்க யாழ்ப்பாணப் பாடசாலையிலிருந்து வவுனியாவுக்கு செல்லவேண்டிய சூழ்நிலை உருவானது. யுத்தம் காரணமாக அவர் க.பொ.த சாதாரண தரம் வரை மட்டுமே அவரால் கற்கமுடிந்தது. "எனது கல்வியினை நான் தொடர்ந்திருந்தால் இப்போது நான் வேறு எங்காவது இருந்திருப்பேன்," என தனது நினைவை ஏனைய சாத்தியமான வாழ்க்கையுடன் மீட்டுப்பார்க்கின்றார்.

1997ஆம் ஆண்டு ஜயசிக்குறு என்ற பாரிய யுத்தம் ஆரம்பித்தபோது, ஷாலினி தனது குடும்பத்துடன் மல்லாவி என்ற இடத்திற்கு சென்றார், ஆனால் 2000 ஆம் ஆண்டு மீண்டும் தமது கிராமத்திற்கு திரும்பிச்சென்றனர். ஏனெனில் "நாங்கள் மீண்டும் திரும்பி வருவதற்கே விரும்பினோம்."ஏன ஷாலினி கூறினார். மோதல் தவிர்ப்புக் காலங்களில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் கடத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. ஆனால்

அங்கு பீரங்கிகள் மற்றும் விமானம் மூலமான குண்டுவீச்சுத்தாக்குதல்களின் சத்தங்களை அவர் கேட்கவேயில்லை.

2000 ஆம் ஆண்டில், ஷாலினி திருமணமாகி அவர் ஐந்து பிள்ளைகளைக் கொண்ட ஒரு குடும்பமானார் அப்போது அவரது மூத்த புதல்வி க.பொ.த சாதாரண தரக் கல்வியை தொடர்ந்துகொண்டிருந்தார். அவர்கள் அப்போது தான் கட்டிமுடித்த வீட்டினை கைவிட்டு அவர்களது எல்லா பொருட்களையும் ஒரு உழவு இயந்திரத்தில் ஏற்றியபடி மறுபடியும் ஒட்டிசுட்டானுக்கு புலம்பெயர்ந்தனர். அங்கிருந்து அவர்கள் கற்சிலைமடுவுக்கும் பின்னர் புதுக்குடியிருப்புக்கும் இறுதியாக முள்ளிவாய்க்காலுக்கும் புலம்பெயர்ந்தனர். ஷாலினி இறுதிக்கட்ட யுத்தத்தினை ஒரு கோரக்கனவாக விபரித்தார்:

> மழையைப்போல குண்டுவீச்சு விமானங்கள் எறிகணைகளை வாரியிறைத்தன. மக்கள் அவ்விமானங்களைக் கண்டபோது விமானக்குண்டுகள் பதுங்குகுழிகளை தகர்த்துவிடும் என்ற அச்சத்தால் தமது பதுங்குகுழிகளையும் விட்டுவிட்டு ஓடினார்கள். விமானங்கள் எங்கள்மீது எறிகணைகளை பொழிந்து தள்ளின. நாங்கள் பொதுவாக திறந்தவெளிகளுக்கே ஓடுவது வழக்கம். அவ்வாறு ஓடும்போது தரையிலேயோ அல்லது முன்னாலோ என்ன இருக்கிறதென்பதனை கண்டுகொள்ள அவகாசம் கிடைப்பதில்லை- மக்கள் மேல்நோக்கியவாறே ஓடுவார்கள். எவ்வேளையிலும் மக்கள் எப்போதுமே தமது பிள்ளைகளை பற்றிப்பிடித்தவாறும் கூக்குரலிட்டவாறுமே காணப்பட்டனர்.

இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் சமூகமானது ஒருவருக்கொருவர் பதுங்குகுழிகளை அமைக்கவும் உணவு மற்றும் அத்தியாவசியமான பொருட்களை பெற்றுக்கொள்ளவும் உதவுவதற்கு முன்வந்தது என ஷாலினி கூறினார்:

> மக்கள் தமது பதுங்குகுழிகளைச்சுற்றி பாதுகாப்பு அரண்களை அமைக்கும்பொருட்டு நான் பல மண்மூடைகளை புடவை துணியில் தைத்தேன். நான் எனது தையல் இயந்திரத்தினை பதுங்குகுழியினுள் வைத்து மண்மூடைகளை ஓயாமல் தைத்தவண்ணம் இருந்தேன். அதற்கான தையற்கூலியினை நான் மக்களிடம் அறவிடவில்லை. நான் அடுத்தடுத்து மண்அரணுக்கான மூடைகளை தைத்துக்கொண்டேயிருந்தேன். பதுங்குகுழியினுள் இருந்தபடி தைத்துக்கொண்டிருந்தது சௌகரியமானதாக இருக்கவில்லையெனினும் நான் ஓய்வு எடுத்துக் கொள்ளவேயில்லை. எனது கணவர் மண் அரணுக்கான மூடைகளை விநியோகித்துக்கொண்டிருந்தார். இம்மண்மூடைகள் தைத்ததற்கான பணம் எவ்வளது என மக்களும் கேட்கவில்லை நானும் அவர்களிடம் பணத்தை கோரவில்லை- அவர்கள் விரும்பினால் அதற்கான பணத்தை அவர்கள் வழங்கும்பொருட்டு நாங்கள் ஒரு பெட்டியினை வீட்டில் வைத்திருந்தோம். ஆனால் நான் பணத்தை ஒரு பொருட்டாக எண்ணவில்லை- நாங்கள் யாவரும் உயிர்தப்பிப்பிழைப்பது ஒன்றே ஒரு பொருட்டாக இருந்தது.

ஒவ்வொருவரும் ஏனைய ஒவ்வொருவரது பிள்ளைகளைக் கண்காணித்தவாறே இருந்தனர் என ஷாலினி குறிப்பிட்டார். ஒரு முறை ஷாலினியின் குடும்பத்திற்கு அருகிலிருந்த ஒரு தம்பதியினர் செவிப்புலன் குறைபாடுள்ளவர்கள். எறிகணைகள் மற்றும் குண்டுத்தாக்குதல்கள் நடைபெறும்வேளைகளில் அக்குடும்பத்தினருக்கு ஷாலினி எச்சரிக்கை வழங்குவார் அப்போது அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச்செல்வார்கள். துரதிஷ்டவசமாக அத்தம்பதியினர் தமது பதுங்குகுழியினுள் தஞ்சம் புகுந்திருந்தும் பின்னர் நடந்த எறிகணைவீச்சிலே கொல்லப்பட்டனர்.

மோசமான எறிகணைத் தாக்குதல்களின்போது ஏனைய பிள்ளைகளைப் போன்று ஷாலினியின் மகளும் படையினரால் கைதுசெய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்டமையானது இன்றும் அவரது இருதயத்தை உலுக்கிக்கொண்டிருக்கும் ஆறாத வடுவாக இருக்கின்றது:

> குண்டுத்தாக்குதலானது மிகவும் மோசமான நிலையடைந்தபோது நாங்கள் பதுங்குகுழிகளை விட்டு வெளியேறி ஓட ஆரம்பித்தோம். பாதுகாப்பான திசை எதுவென்று எவருக்குமே தெரியாத நிலையில் ஆனால் பிள்ளைகளையும் குழந்தைகளையும் கையில் பற்றியிருந்தவாறு எறிகணைத்தாக்குதலுக்கு அப்பாலுள்ள பிரதேசத்திற்கு ஓடினோம். நாங்கள் ஓடிக்கொண்டிருந்தபோது சிலர் ஒரு ட்ரக் வாகனத்தில் வந்து இளம் பிள்ளைகளை சிறைப்படுத்தினர். நான் என்னுடைய மகளை இறுகப்பற்றியிருந்தபோது ஒருவன் என்னை அந்த ட்ரக் வாகனத்தினுள் தூக்கியெறிந்தான். அப்போது நான் எனது மற்றைய பிள்ளைகளைப் பார்த்துக்கொள்ளும்படி எனது தாயாரை நோக்கிக் கதறினேன் ஏனெனில் எனது மூத்த புதல்வியை நான் தனியாக விட விரும்பவில்லை. ஆனால் சிறிது நேரத்தில் அவர்கள் வாகனத்தை நிறுத்தியதும் என்னை அடித்து ட்ரக் வாகனத்திலிருந்து என்னையும் தனது பிள்ளையை இறுகப் பற்றியிருந்த இன்னொரு தாயார் ஒருவரையும் வெளியே தள்ளிவிட்டனர். அதுவே நான் எனது புதல்வியின் முகத்தை பார்த்த இறுதிக்கணமாகும்.

ஷாலினி கூறுகையில் ட்ரக் வாகனத்திலிருந்த அவர்கள் தள்ளிவிட்ட இடமானது படையினரின் எறிகணைத் தாக்குதல் நிகழும் இடமாக இருந்தது. அவர் அவ்வேளையே சோர்ந்துபோய் வயலின் மத்தியில் உட்கார்ந்திருந்து யோசித்தவண்ணம் இருந்தார். ஆனால் அவருடன் தள்ளிவிடப்பட்ட மற்றைய பெண்மணி எறிகணைத் தாக்குதலிலலிருந்து பாதுகாக்கும்பொருட்டு ன்னை தரையில் பாதுகாப்பாக படுத்திருக்குமாறு ஷாலினியை கட்டாயப்படுத்தினார். பின்னர் ட்ரக் வாகனத்தின் பின்னால் ஓடிவந்துகொண்டிருந்த ஷாலினியின் கணவர் இவர்கள் இருவரையும் கண்டுகொண்டார். அந்நாளிலிருந்து இன்றுவரை ஷாலினி தனது புதல்வியை நினைத்து அழுவதை நிறுத்தவுமில்லை அந்த மகளை தேடுவதில் பின்வாங்கவுமில்லை.

யுத்தத்தின் இறுதிநாட்களில், ஷாலினியும் அவருடன் இருந்த சில குடும்பங்களும் ஓமந்தை இராணுவ முகாமுக்கு கூட்டிச்செல்லப்பட்டனர். எம்மில் எவராவது விடுதலைப்புலிகள் இயக்கத்தில் ஆகக்குறைந்தது ஒரு நாளாவது இருந்திருப்பின் அவர்கள் யாவரும் சரணடையவேண்டும் என்றும் அவ்வாறு சரணடையாவிட்டால் அது கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் இராணுவ அதிகாரிகள் வந்து தினமும் எம்மிடம் கூறினர். :தலைமுடி குட்டையாக வெட்டியிருந்தவர்களால் எதுவும் செய்யமுடியவில்லை.'' ஷாலினி கூறுகையில் "அவர்களுடைய பலத்த அழுகுரல்கள் ஒரு மரண வீட்டில் நிகழும் ஒப்பாரியைப்போல இருந்தது.''

காணாமலாக்கப்பட்ட குடும்பங்கள் மத்தியில் ஷாலினி இப்போது ஒரு கடுமையான செயற்பாட்டாளராகத் தென்படுவதுடன், 2017ஆம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டங்களில் பங்கெடுப்பவராகவும் செயற்படுகின்றார், மேலும் நாங்கள் பார்த்த ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையில் நாங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் இதிலிருந்து

பின்வாங்கப்பேவதில்லை'' என ஷாலினி கூறுகிறார். யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்தவர்கள் பற்றி பேசுகின்றபோது சரணடைந்தவர்களின் விபரமடங்கிய பட்டியலை தயாரித்து வெளியிட அரசாங்கம் தவறியமைக்கு காரணம் என்ன என வினாவுகிறார்:

> சரணடைந்தபோது இராணுவத்தினர் சரணடைந்தவர்களது பெயர்விபரங்கள் உட்பட சகல தரவுகளையும் பதிவுசெய்து கையொப்பங்களையும் பெற்றுக்கொண்டதுடன் அவர்களை புகைப்படமும் பிடித்தனர். ஆனால் அவர்களில் ஒருவரும் உயிருடன் இல்லையென இராணுவத்தினர் கூறுகின்றனர் அது எப்படி? சரணடைந்தவர்கள் எல்லோரையும் அவர்கள் பதிவுசெய்தனர்.கையெழுத்துக்களை பெற்றுகொண்டதுமல்லாமல் அவர்களது கைவிரல் அடையாளங்களையும் பெற்றுக்கொண்டனர். அதன் பிரதிகள் எங்கே? அப்பதிவேட்டினை பெற்றுக்கொண்டால் சரணடைந்தவர்களது பெயர் விபரம் கொண்ட ஒரு பட்டியலை பெற்றுக்கொள்ளமுடியும். ஆவ்விபரங்களை அவர்கள் என்ன செய்தனர்?



எல்லா காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மார்களைப்போல, ஷாலினியும் தனது மகள் எங்கே இருக்கிறாள் என அறிவதற்கும் ஆவலாயும் அவளை மறுபடியும் பார்ப்பதற்காக தவித்துக்கொண்டிருக்கிறார். தனது காணாமலாக்கப்பட்ட மகளை நித்தமும் நினைத்தவாறு வீட்டில் எந்தவொரு வைபவங்களையும் அவர் நடாத்துவதில்லை.''நான் மகளைக்குறித்த வேதனையால் நடுஇரவுவேளைகளில் அழுவது வழமையானதாகிவிட்டது.''

காணாமலாக்கப்பட்ட தமது கணவர்களின் பெண்களைப்பற்றி பேசுகையில், ‘‘எத்தனை பெண்கள் தமது பொட்டையும் தாலியையும் அகற்றுவதா அல்லது தமது கணவன் வருவார் என்ற நம்பிக்கையுடன் அணிவதா என்ற குழப்பத்தில் வாழ்கின்றனர்?’’ என ஷாலினி வினாவுகின்றார்.

ஷாலினிக்கு தனது சுயபலத்தை நன்கு அறிவார் என்றவகையில் தனது மகளை மீண்டும் பார்ப்பேன் என்ற தீர்மானத்திலும் சகல பிரதேசங்களிலும் ஏனைய காணாமலாக்கப்பட்டவர்களுக்காகவும் தொடர்ந்தும் அவர்களை தேடிய வண்ணம் போராடுவார்.

ஷாலினி போன்ற ஆனேக தாய்மார்கள் மோசமான உடல்,உள சிக்கல்கள் பலவற்றுக்கு முகம்கொடுத்துக்கொண்டிருப்பதுடன் பதில்கள் கிடைக்கவேண்டிய இக்கட்டான நிலையிலும் உள்ளனர். இவ்வாறான பெண்களுக்கு, யுத்த நிறைவானது இவர்களது துன்பங்களின் சோதனைக்கு முற்றுப்புள்ளியிட தவறிவிட்டது.